

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## தரம் 5

## தேசிய புலமைப் பரிசில் பரீட்சை மதிப்பீட்டு அறிக்கையும், செயற்பாட்டுப் பதிவுகளும்

## 2013 - 2020

2021.01.29

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

## தரம் 05
## தேசிய புலமைப் பரிசில் பரீட்சை
## மதிப்பீட்டு அறிக்கையும்,
## செயற்பாட்டுப் பதிவுகளும்
## 2013 - 2020

**29.01.2021**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர நோக்கு

ஒளிமயமான வாழ்விற்கு தரமான
அடிப்படைக் கல்வி

# பணிக்கூற்று

பூகோள ரீதியாக சவால்களுக்கு
முகங்கொடுக்கக் கூடிய
புத்தாக்கங்களை உருவாக்கும்
பொருத்தப்பாடுடைய சமநிலை
ஆளுமையுள்ள செயற்றிறன் மிக்க
பண்பு சார் நற்பிரஜைகளை
சமூகத்துக்களித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



கிளிநொச்சி கல்வி வலயத்திலே கரைச்சிக் கோட்டத்தில் உள்ள புகழ்பூத்த பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் 2020ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்விற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

கடந்த ஆண்டு நாட்டிலே "கொரோனா" எனும் கொடிய நோயினால் மாணவர்களின் கல்வியிலே பல இடர்பாடுகள் ஏற்பட்ட போதிலும் பாடசாலையின் அதிபர் திரு.அ.பங்கையற்செல்வன் அவர்களின் நேர்த்தியான வழிகாட்டலிலும், தற்துணிவிலும், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பிலும், பெற்றோரின் ஒத்துழைப்பிலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சாதனை படைத்து அனைவரும் போற்றும் வகையில் தலைநிமிர்ந்து நிற்கிறது வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்.

அந்தவகையிலே பரீட்சைக்கு தோற்றிய 44 மாணவர்களில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 14 மாணவர்களும் ஏனைய மாணவர்கள் அனைவரும் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100% சித்தியடைந்து இப் பாடசாலைக்கு பெருமையை தேடிக் கொடுத்திருக்கின்றார்கள்.

கிளிநொச்சி வலயத்திலே உள்ள பாடசாலைகளில் அனைத்து வகுப்புக்களிற்கும் திறன் வகுப்பறை கொண்டிருக்கிறது என்ற சாதனையுடன் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் வெற்றி நடை போட்டுக் கொள்கின்றது. இப்பாடசாலை, மென்மேலும் சாதனை படைத்து சிறந்த நற்பிரஜைகளையும் கல்விமான்களையும் உருவாக்க வேண்டும் என்று இறைவனை போற்றுகின்றேன்.

**அ.ரவீந்திரன்,**
**உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆரம்பக்கல்வி,**
**வலயக்கல்வி அலுவலகம்,**
**கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் பார்வையில்...



கிளி/ வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் கரைச்சி கல்விக் கோட்டத்தில் வளர்ந்துவரும் ஒரு பாடசாலையாகும். 2013ம் ஆண்டு வட்டக்கச்சி ம. வி இல் இருந்து பிரித்தெடுத்த ஆரம்ப பிரிவு வகுப்புக்களை கொண்ட இப்பள்ளி எட்டு வருடத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் 100% வீத சித்தியை எய்தி அனைத்து மாணவர்களும் தேர்ச்சி நிலையை அடைந்ததை நிரூபித்துள்ளனர். இந்த வகையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் 2013 - 80% - 08 மாணவர்களும், 2014இல் - 88% - 06 மாணவர்களும், 2015 இல் 74% - 03 மாணவர்களும், 2016 இல் 95% - 07 மாணவர்களும், 2017 இல் 92% - 06 மாணவர்களும், 2018 இல் 97% - 10 மாணவர்களும், 2019 இல் 89% - 11 மாணவர்களும், 2020 இல் 100% - 14 மாணவர்களுமாக உயர்ந்து செல்வதையும் கண்ணூடாக காணக்கூடியதாக இருந்தது. இந்த 08 வருடகாலத்தில் இரண்டு அதிபர்களை இப்பாடசாலை கண்டுள்ளது. 2016ஆம் ஆண்டு திருவாளர் அரசரத்தினம் பங்கையற்செல்வன் அவர்கள் பொறுப்பெடுத்ததை அடுத்து இப்பாடசாலையின் சமூக தொடர்பு மேலும் வலுவடைந்து வனப்பு மிகு “கவின்” நிலையை கொண்டதாக பாடசாலையின் சூழல் கல்வி வளர்ச்சியை மெருகூட்டுவதாக அமைந்துள்ளது. வடமாகாணத்தில் ஆரம்ப கல்வியில் ஒரு எழுச்சி மிகு களமாக இப் பாடசாலையின் கவின்நிலை வளர்ச்சி அதிபர் திருவாளர் அரசரத்தினம் பங்கையற்செல்வனின் அயராத முயற்சியும் அர்ப்பணிப்பும் பாடசாலையின் வளர்ச்சியை முன்நிறுத்துகின்றது.

எதிர்காலத்தில் பாடசாலை மென்மேலும் வளர்ச்சியடைய புதிய திட்டங்களுடன் நவீனகால கற்றல் கற்பித்தல் முயற்சிகளை முன்கொண்டு வந்து தங்களாலும் முடியும் என்பதை அதிபர் அவர்களின் அதிக ஊடல் எடுத்துக்காட்டுகின்றது. இந்த வகையில் வட்டக்கச்சியின் கல்வி மேலும் வளர இப்பாடசாலையின் முன்னெடுப்புக்கள் வழிகோலுகின்றது.

கொரோனா காலத்தில் நடைபெற்ற கணினிக்கல்வி Zoom வகுப்புக்கள், செயலட்டைகள் விநியோகம், ஆசிரியர்களை கொண்டு புதிய செயலட்டைகள் தயாரித்து கொடுத்தமையும் அவற்றை திருத்தி மதிப்பிட்டமையும் அதிபர், ஆசிரியர்களுக்கு கூட்டு முயற்சிக்கு கிடைத்த வெற்றியாக காண்கின்றேன். இப்பாடசாலை மேலும் வளர்ந்து விரிவு பெற வாழ்த்தி நிற்கின்றேன்.

நன்றி

**சு.தர்மரத்தினம்**
**கோட்டக்கல்வி அதிகாரி,**
**கரைச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்கால ஆசிரிய ஆலோசகரின் வாழ்த்துச் செய்தி



2020ம் ஆண்டு தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 100 வீத சித்தியைப் பெற்றுக் கொண்ட பாடசாலையில் கிளி/வட்டக்கச்சி ஆரம்பப் பாடசாலையும் தனக்கென தனித்துவத்தை நிலைநாட்டிக் கொண்டமை சிறப்பாகும். இவ் வெற்றியை ஈட்டிய மாணவர்களையும் வழிப்படுத்திய அதிபர் திரு.அ.பங்கையற்செல்வன் அவர்களையும் வழிகாட்டிய ஆசிரியர்களான திரு.தேவராசா நிகேதரன், திருமதி நகுலேஸ்வரி ஜெகதீஸ்வரன் அவர்களையும் இதற்கு அடித்தளமிட்ட ஆரம்பவகுப்பு ஆசிரியர்களையும் வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றோம்.

இம் மாணவர்களுடைய வளர்ச்சியில் உள்ளகக் கவிநிலையில் திகழ வைத்து கணினி விற்பன்னர்களாக்கி, இலத்திரனியல் கருவிக் கையாள்பவர்களாக்கி. முத்தமிழ் ஞானம் புகட்டி, கற்றவர் மனங்களில் பள்ளியின் பதிவுகளை பசுமை நிறைந்ததாக்கி அடுத்த நிலைக்கு வழியனுப்பும் செயற்கரிய செயலானது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

பா.ஶ்ரீஸ்குமார்
சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிபர் அறிக்கை

1965 ஆம் ஆண்டு வட்டக்கச்சி மத்திய கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு அழிக்க முடியாத அடையாளங்களுடன் மிகச் சிறப்பான கல்வி பணியை வழங்கி வந்ததை எல்லோரும் அறிவர் கல்வித்திட்ட மாற்றங்கள், கலை திட்ட மாற்றங்களுக்கு ஏற்ப இந்த பாடசாலையும் மாற்றங்களை அவ்வப்போது எதிர் கொண்டமை வழமையான ஒன்றாகும்1-13 வரை வகுப்புகள் இருந்த இப்பாடசாலை 2013 ஆண்டு 1000 பாடசாலை அபிவிருத்தி திட்டத்தின் மூலம்1-5 வரையான ஆரம்ப பிரிவு பாடசாலையாகவும் 6-13 வரையான இடை நிலைப்பிரிவு பாடசாலையாகவும் பிரிந்து கொண்டது / பிரிக்கப்பட்டது.

ஆரம்பப்பிரிவு தனியாக பிரிக்கப்பட்ட போது கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் என்ற எமது பாடசாலை உதயமாகியது 01.01.2013 இல் பாடசாலை உருவானாலும் சில காலம் வட்டக்கச்சி மத்திய கல்லூரி வளாகத்திலேயே இயங்கி 12.06.2013 அன்று தனியாக இவ்விடத்தில் தனது கல்வி செயற்பாடுகளை ஆரம்பித்தது இப் பாடசாலையின் முதலாவது அதிபர் திரு.த.தர்மராஜா அவர்கள் சமூகத்துடன் இணைந்து இவ்விடத்தில் பாடசாலை இயங்க பெரு முயற்சியினை மேற்கொண்டமை மனம் கொள்ளத்தக்கது.

ஒரு பாடசாலையின் அடையாளம் என்பது கல்வியோடும், கல்வியோடு இணைந்து செயற்பாடுகளோடும் இணைத்து சமூகத்தால் உற்று நோக்கப்படுகிறது. ஒரு பாடசாலையின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் அவற்றின் சாதக/பாதக தன்மைகள் பாடசாலையின் எழுச்சி, வீழ்ச்சி பற்றி பேச வைக்கிறது. இணைபாடவிதான செயற்பாடுகள், மாணவரின் விழுமியம் சார்கோலங்கள் சாதகமாக முன்னேறியிருப்பினும் அவையும் சிறப்பாக பேசப்படும், ஆயினும் பரீட்சைப் பெறுபேற்றின் உயர்வு ஒன்றே எல்லோராலும் எப்போதும் அவதானிக்கப்படுவதாகவும் பாடசாலைக்கு மேல்உள்ள நிர்வாக கட்டமைப்பினரால் எதிர்பார்க்கப்படுவதாகவும் இருந்து வருகிறது அதே வேளை ஆசிரியர்களின் திறனும் ஆற்றல்களும் பிள்ளைகளின் பொது பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. ஆயினும் வெறுமனே பாடசாலை சூழலும், பாடசாலையும் ஆசிரியர்களின் உழைப்பு மட்டும் மாணவரின் பெறுபேறுகளை தீர்மானித்து விட போதுமானதல்ல பெற்றோர்களில் அக்கறை, வீடுகளில் கற்றலுக்கான சூழல் மாணவர்களின் உடல், உள ஆரோக்கிய நிலை, போசாக்கு நிலை, சமூகச்சூழல் போன்றனவும் உயர் பெறுபேற்றினை தீர்மானிக்கின்றன,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையைப் பொறுத்தவரை இந்த சூழ்நிலைகள் மாணவர்களுக்கு வாய்ப்பாக இருந்த போதிலும் சில பிள்ளைகளின் சூழ்நிலைகள், பிரச்சனைக்குரியதாகவும் அவ் பிரச்சனைகளில் இருந்து விடுபட முடியாதவையாகவும் காணப்படுகின்றன. இவற்றினைத் தாண்டியே பல மாணவர்களுக்கு கற்றல் கற்பித்தலை மேற்கொள்ள வேண்டிய நிலையிலுள்ளோம்.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை என்பது மாணவர்களுக்கு மிகவும் சவால்மிக்கதாகவும், மாணவர்களுக்கு அழுத்தங்களை கொடுப்பதாகவும் காணப்படுகின்றமையும், பெறுபேற்றை மட்டும் நோக்கி பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் மாணவர்கள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுவதாகவும் பொதுவாக கருதப்படுகிறது. ஆயினும் 5 ஆண்டுகள் ஆரம்பக் கல்வியை கற்றபிள்ளை இடைநிலை வகுப்புகளுக்கு பயனிக்க முன்னர் என்ன நிலையினை எட்டியுள்ளான் என்பதற்கு இந்த அளவீடு சிறப்பானதாக அமைகிறது. தரம் 1இல் இருந்து எண்ணையும், எழுத்தையும் சிறப்பாக மாணவர்களுக்கு புகட்டி வந்தால் இந்த பரீட்சை பெரும் நெருக்கடியான ஒன்றல்ல என்பது எனது கருத்தாகும்.

ஆரம்ப பாடசாலைகளில் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகளே அவற்றின் செயற்பாட்டினைத் / சிறப்பினைத் தீர்மானிக் கின்றன என்பது மறுக்க முடியாததாகும், எமது பாடசாலை 2013 இல் இருந்து 2020 வரை புலமைப்பரிசில் பெறுபேறுகள் சாதகமான நிலையில் முன்னேறிச் செல்வதைக் காணமுடிகிறது. ஆரம்பத்தில் அடிப்படை வசதிகளற்று இருந்த நிலையில் பெறுபேற்று நிலையினை உயர்த்த எடுத்த பல்வேறு முயற்சிகளின் பயனாக தற்போது நாம் இப் பரீட்சையில் 100% சித்தியினை தொட்டு நிற்பது நிறைவினைத் தருகிறது.

2016 ஆம் ஆண்டு இப்பாடசாலையினை பொறுப்பேற்ற போது 2015 இன் சித்தி வீதம் 74% ஆகக் காணப்பட்டது. வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்திபெற்றோர் எண்ணிக்கை 3 ஆகக் காணப்பட்டது, இந்த நிலையினை மெல்ல மெல்ல அதிகரிக்க வேண்டும் என்பது எனது எண்ணமாக இருந்ததுடன் ஆசிரியர்களுக்கும் இதனை தொடர்ந்து வலியுறுத்தி வந்தேன் தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெறும் மாணவரின் எண்ணிக்கையை கூட்ட முயற்சிகள் மேற்கொள்ளும் போது நிச்சயம் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெறும் மாணவரின் எண்ணிக்கையும் அதிகரிப்பதை அவதானிக்க முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2016 ஆம் ஆண்டில் அதீத பௌதீக வள குறைபாடுகளுடன் இருந்த நாம் அவற்றை விரைவுபடுத்தி பெற்றுக்கொள்ள முயற்சிகள் மேற்கொண்டதன் பயனாகவும், ஆசிரியர்களின் கடினமான உழைப்பாலும், பெற்றோரின் அயராத பங்களிப்பாலும் இவ்வருடம் 100% சித்தி எமக்கு சாத்தியமாயிற்று. இந்த சாத்தியமான நிலைமைக்கு காரணமான எமது செயற்பாடுகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. நேர்த்தியான வகுப்பறைகளை உருவாக்கி வழங்கியமை
2. Smart வகுப்பறைகளை உருவாக்கி மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் புதிய மாற்றங்களை கொண்டு வந்தமை.
3. மாணவர்களே Smart board ஐ பயன்படுத்தும் நிலையினை உருவாக்கியமை.
4. தொடர்ச்சியான மேலதிக வகுப்புக்களை தொடர்ந்து நடாத்தியமை.
5. கணினி வகுப்புக்களில் மாணவர்களுக்கு ஈடுபாட்டினை ஏற்படுத்தியமை
6. ஆங்கில கல்வியினையும் சமநேரத்தில் தொய்வின்றி வழங்கியமை.
7. இரண்டாம்மொழி (சிங்களம்) கற்பிக்க ஆசிரியரை நியமித்து முறையாக சிங்கள பாடத்தினை கற்பித்தமை.
8. மாலை நேர இரவு நேர வகுப்புக்களை மேற்கொண்டமை.
9. இத்தனை வகுப்புக்களுக்கும் பெற்றோர்கள் அதீத பங்களிப்புக்கள் வழங்கியமை.
10. அதிகளவான பயிற்சி வினாத்தாள்களை வழங்கி, மாணவர்களுக்கு பயிற்சி வழங்கியமை.
11. பயிற்சி பரீட்சைகளில் அதிக புள்ளிகள் பெறும் பிள்ளைகளை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரிசில்கள் வழங்கி ஊக்குவித்தமை.
12. குறைவான புள்ளிகளை பெறும் மாணவர்களது பிரச்சினைகளை கண்டறிந்து ஏனைய ஆசிரியர்களின் உதவியுடன் அவர்களது பிரச்சினைகள் தீர வழி ஏற்படுத்தியமை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ISA, ADE வலய அணியினரின் சீரான மேற்பார்வை அவர்களது கருத்துக்களுக்கு ஏற்ப நிலைமைகளை மாற்றியமைத்தல் / சீர் செய்தல்.

14. மாவட்டத்திலும், மாவட்டத்திற்கு வெளியிலும் உள்ள சிறப்பான வளவாளர்களை வரவழைத்து விசேட வகுப்புக்களை தொடர்ச்சியாக மேற்கொண்டமை.

15. பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் உள்ளூர் நிறுவனங்கள் வகுப்புக்களுக்கு ஆதரவு வழங்கியமை / பெறப்பட்டமை.

16. ஒவ்வொரு தடவையும் சித்தி பெற்ற மாணவர்களுக்கு சிறப்பான முறையில் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பி களின் அனுசரனையுடன் பரிசளிப்பு நிகழ்வுகளை நடாத்தியமை.

17. வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக்கல்விப் பணிப்பாளர்களின் சிறந்த ஆதரவும், வழிகாட்டல்களும், ஊக்குவிப்புக்களும்

18. வகுப்பு மட்டத்தேர்வுகளில் 70 புள்ளிகளுக்கு குறைவாக பெறும் மாணவர்கள்,தமது புள்ளிகளை அதிகமாகப்பெறும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஊக்குவிப்புக்களை வழங்கி ஊக்கப் படுத்தியமை.

2016 இல் இப்பாடசாலையில் எனது முதல் அணி மாணவர்கள் 7 பேர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று 95% சித்தியை பெற்று தந்தனர். அத்துடன் அந்த ஆண்டில் மாவட்டத்தில 1ம் நிலை புள்ளியைச் செல்வன் யுகதீபன் நுகாந் என்ற மாணவன் பெற்று எமது முயற்சிக்கு உற்சாகம் தந்தார். இந்த ஐந்து வருட பெறுபேற்றின் சித்தி வீதத்தில் சிறு சிறு வீழ்ச்சியும், எழுச்சியும் ஏற்பட்டிருந்ததை ஏற்றுக்கொண்டு அதற்கான காரணங்களை கண்டறிந்து சீர் செய்தோம். அதன் பயனாக 2020 இல் 100% சித்தியை எம்மால் எட்ட முடிந்தது. குறித்த காலத்திலிருந்து வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கையானது சாதகமாக அதிகரித்து செல்வதைக் காணமுடிகிறது.

கடந்த ஆண்டு பெறுபேற்றின் 100% வீத சித்தியை பெற்ற நாம் இதனை சாதனையாக கருதாது சவாலாகவே கொள்ள வேண்டியுள்ளது. ஏனெனில் இந்த 100% சித்தியினை இனிவரும் காலங்களில் தொடர்ந்து பெறவும், தக்க வைத்துக் கொள்ளுவதற்கும் அதிக விலை கொடுக்க வேண்டியுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காக ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை நிர்வாகம் என்பனவும் இச் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்குபவர்களும் தொடர்ந்து ஓயாது பயணிக்க வேண்டியுள்ளது.

2020 ஆண்டு உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட COVID-19 கொரோனா தொற்று நோய் பேரிடர் காரணமாக பாடசாலைகள் மூடப்பட்ட போது மார்ச்மாதத்தின் பின்னர் நேரடியான வகுப்புக்களை நடாத்துவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டோம் ZOOM இணையவழி மூலமாகவே அதிக நாட்கள் வகுப்புக்களை மேற்கொண்டோம். ஏற்கனவே Smart class செயற்பாடுகள், கணனிப்பயன்பாடுகள் அதிகம் இருந்ததால் ZOOM இணையவழி வகுப்புக்களை நடாத்துவதும் பிள்ளைகள் அதில் பங்கு கொள்ளுவதிலும் பெரும் சிரமங்கள் எமக்கு இருக்கவில்லை இவ் வருடம் கற்பித்த ஆசிரியர்களான திரு.தேவராசா நிகேதரன் திருமதி நகுலேஸ்வரி ஜெகதீஸ்வரன் ஆகியோரின் இடைவிடா தொடர் உழைப்பு, ஏனைய ஆசிரியர்களின் ஆதரவு என்பன காரணமாக 100% சித்தியை மிக நெருக்கடியான காலத்திலும் எம்மால் பெறமுடிந்தது.

COVID-19 தொற்று நெருக்கடி காலம். பாடசாலைகள் இன்மை காரணமாக மாணவர்களுக்கான பாராட்டு விழாவையும், பரிசளிப்பு விழாவையும் உடனடியாக எம்மால் செய்ய முடியாது போய்விட்டது. 2021 பாடசாலை ஆரம்பித்ததும் இந்த பிள்ளைகளை கௌரவிப்பதற்கான அனுசரணையும் வழங்க முன்வந்த வட்டக்கச்சி மத்திய கல்லூரி பிரித்தானிய கிளை பழைய மாணவர் சங்கத்தினருக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிப்ப துடன் இச் செயற்பாட்டுக்கு பங்களித்த திரு.பே.ஜெயகரன், திரு.சி.சிவகரன், திரு.கோ.கோணேஸ்வரன் (ரூபன்), திரு.யுகந்தன், திருமதி.ஜெயந்தி, திருமதி.சு.சுகுணா ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகள் 2013 தொடக்கம் 2020 வரையான எமது புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பான மதிப்பீட்டு ஆவணமான இந்த அறிக்கையை உருவாக்க முயற்சித்த போது அதற்கு அனுசரணை புரிந்த பழைய மாணவர் சங்க பிரித்தானிய கிளையினருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களின் ஆதரவுடன் எம் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுப்போம்.

நன்றி. வணக்கம்

**அ.பங்கையற்செல்வன்**
**அதிபர்,**
**கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

### ஆண்டு 2013

| | | |
|---|---|---|
| 1 | லிங்கமூர்த்தி சங்கவன் | 171 |
| 2 | திருவருட்சந்திரன் றொனால்ட் | 153 |
| 3 | குணபாலசிங்கம் லஜீவ் | 156 |
| 4 | பரமசிவம் சாம்பவி | 171 |
| 5 | விமலச்சந்திரன் நிவேதா | 157 |
| 6 | ஜெயக்குமார் யாழினி | 170 |
| 7 | மோகன் அகழ்விழி | 156 |
| 8 | இராசரத்தினம் சுகந்திரா | 154 |

### ஆண்டு 2014

| | | |
|---|---|---|
| 1 | பாலமனோகரன் றெபேக்கா | 153 |
| 2 | இளஞ்சுரேஸ் தமிழ்மதி | 163 |
| 3 | பூலோகராஜா ஜிந்துக்ஷா | 164 |
| 4 | மோகன் அபிராம் | 173 |
| 5 | லோகேஸ்வரன் டனுஜன் | 158 |
| 6 | சேகரன் சிவகுமரன் | 183 |

மாவட்ட நிலை 01

### ஆண்டு 2015

| | | |
|---|---|---|
| 1 | கிருபாலன் கேனுஜன் | 171 |
| 2 | திருவருட்சந்திரன் றொகாட்டன்று | 167 |
| 3 | பரமசிவம் மதுரா | 165 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 2016

| | | |
|---|---|---|
| 1 | யுகதீபன் நுகாந் | 191 |
| 2 | சிவபாலன் செம்பியன் | 168 |
| 3 | பிரபாகரன் நிகேதன் | 156 |
| 4 | துரைச்சந்திரன் மதுசிகா | 163 |
| 5 | கணேசலிங்கம் போஜனா | 160 |
| 6 | தமிழ்ச்செல்வன் டினோஜன் | 155 |
| 7 | தரண்குமார் ஜான்சன் | 152 |

மாவட்ட நிலை 01

## ஆண்டு 2017

| | | |
|---|---|---|
| 1 | கி.சாரங்கி | 179 |
| 2 | லி.சங்கிசை | 171 |
| 3 | வி.நிர்மலன் | 168 |
| 4 | பு.துஸ்யந்தன் | 163 |
| 5 | நா.ஜிவிசன் | 161 |
| 6 | ஜெ.திருவருவி | 156 |

## ஆண்டு 2018

| | | |
|---|---|---|
| 1 | குகபாலன் சுபேசனா | 189 |
| 2 | லோகேஸ்வரன் சாதுரியன் | 185 |
| 3 | யுகதீபன் பிரதிஸ்கா | 182 |
| 4 | பிறேம்குமார் கனியிசை | 180 |
| 5 | ஸ்ரீறங்கநாதன் மதுரிகா | 176 |
| 6 | ஜெயரூபன் அட்சரா | 174 |
| 7 | இரத்தினசிங்கம் ஜென்சிகா | 172 |
| 8 | முகுந்தன் விந்தனா | 172 |
| 9 | சிவகுமார் சிந்துக்ஷான் | 170 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு 2019


| | | |
|---|---|---|
| 1 | ஜெயகாந்த் ஆரணி | 178 |
| 2 | துரைலிங்கம் தர்சிகா | 177 |
| 3 | மாதவரூவன் தாருமதி | 156 |
| 4 | ஜெகதீஸ்வரன் பிரமிலன் | 163 |
| 5 | இராசகுலன் மருஜா | 160 |
| 6 | றதீஸ்கமார் துருவிந்தன் | 159 |
| 7 | தரண்குமார் ஜான்சன் | 152 |
| 8 | பிரதீப்குமார் சுவர்ணன் | 155 |
| 9 | செல்வரூபன் திரிசாளினி | 153 |
| 10 | தர்மகுமாரசூரியாஸ் தர்மிகா | 152 |
| 11 | நகுலேஸ்வரன் அனுரதன் | 152 |

## ஆண்டு 2020


| | | |
|---|---|---|
| 1 | பற்மநாதன் யிதுர்சனா | 183 |
| 2 | அன்ரன் யூட் பிருந்தா | 174 |
| 3 | கிருபாலன் புருசோத் | 174 |
| 4 | சிவநாதன் சபரிக்கரன் | 170 |
| 5 | நந்திவர்மா அபர்சிகா | 169 |
| 6 | லோகநாதன் அக்ஷயன் | 168 |
| 7 | யூட்வில்பிரட் அக்ஷயன் | 165 |
| 8 | சிவகுமார் தரண்யன் | 165 |
| 9 | சுதர்சன் அபிஷேக் | 164 |
| 10 | ஜெயக்குமார் கவிசன் | 162 |
| 11 | சத்தியசீலன் ஹபிசன் | 161 |
| 12 | சசிக்குமார் தர்விசன் | 161 |
| 13 | பார்த்தீபவர்ணன் டினோஜன் | 161 |
| 14 | இந்திரகுமார் நிவேதிகா | 160 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு ரீதியாக வெட்டுப்புள்ளிக்குமேல் பெற்ற மாணவர்களின் விபரம்





## ஆண்டு ரீதியாக 100 புள்ளிக்குமேல் பெற்ற மாணவர்களின் விபரம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு ரீதியாக 70 புள்ளிக்குமேல் பெற்ற மாணவர்களின் விபரம்




## ஆண்டு ரீதியாக சித்தி வீதம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புள்ளிப் பகுப்பாய்வு எண் ரீதியாக


| விபரம் | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 | 2019 | 2020 |
|---|---|---|---|---|---|---|---|---|
| விண்ணப்பித்த மாணவர்கள் | 47 | 52 | 39 | 49 | 50 | 60 | 48 | 46 |
| தோற்றியோர் | 45 | 51 | 39 | 49 | 50 | 60 | 46 | 44 |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றவர்கள் | 08 | 06 | 03 | 07 | 06 | 10 | 11 | 14 |
| 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் | 25 | 26 | 16 | 26 | 28 | 51 | 33 | 44 |
| 70 புள்ளிகளுக்கு மேல் பெற்றவர்கள் | 36 | 49 | 25 | 44 | 46 | 58 | 41 | 44 |
| சித்திவீதம் | 80% | 88% | 74% | 95% | 92% | 97% | 89% | 100% |

## எமது பாடசாலை வரலாற்றில் தரம் 5 புலமைப்பரிசில் வகுப்பில் கற்பித்த ஆசிரியப் பெருந்தகைகள்

| | |
|---|---|
| 2013 | திருமதி. மதிவதனி கேதீஸ்வரன்<br>திருமதி. பிரியாசக்தி கிருபாலன் |
| 2014 | திரு. தேவராசா நிகேதரன்<br>திருமதி. தர்சினி யோகேஸ்வரன் |
| 2015 | திருமதி. தவநதி கௌரிபாலன்<br>திருமதி. விஜயறஜனி நந்தகுமார் |
| 2016 | திரு. தேவராசா நிகேதரன்<br>திருமதி. நகுலேஸ்வரி ஜெகதீஸ்வரன் |
| 2017 | திரு. தேவராசா நிகேதரன்<br>திருமதி. தர்சினி யோகேஸ்வரன் |
| 2018 | திருமதி. சரஸ்வதி ஜெயக்குமார்<br>திருமதி. தர்சினி யோகேஸ்வரன் |
| 2019 | திரு. தேவராசா நிகேதரன்<br>திருமதி. விஜயா தயாகரன் |
| 2020 | திருமதி. நகுலேஸ்வரி ஜெகதீஸ்வரன்<br>திரு. தேவராசா நிகேதரன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தரம் 5 புலமைப்பரிசில் ஆண்டு ரீதியான பகுப்பாய்வு 2013 – 2020




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05 புள்ளிப் பகுப்பாய்வு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வித்தியாலயத்திற்கு வளம் சேர்க்கும் எங்கள் ஆசிரியர்கள் – 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2020
# வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்


ப.யிதுர்சனா – 183


அ.பிருந்தா – 174


கி.புருசோத் – 174


சி.சபரிக்கரன் – 170


ந.அபர்சிகா – 169


லோ.அக்ஷயன் – 168


யூ.அக்ஷயன் – 165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2020
# வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்


சி.தரண்யன் – 165


சு.அபிஷேக் – 164


ஜெ.கவிசன் – 162


ச.ஹபிசன் – 161


பா.டினோஜன் – 161


ச.தர்விசன் – 161


இ.நிவேதிகா – 160

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2020 புலமைப் பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020 புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றி 100 வீத சித்தியை பெற்றுத் தந்த மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 05 புலமைப் பரிசில் பரீட்சை - 2019
# வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்


ஜெ.ஆரணி – 178


து.தர்சிகா – 177


மா.தாருமதி – 169


ஜெ.பிரமிலன் – 163


இ.மருஜா – 160


ற.துருவ்விந்தன் – 159


ச.சனுசியா – 159


பி.சுவர்ணன் – 155


செ.திரிசாளினி – 153


த.தர்மிகா – 152


ந.அனுரதன் – 152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை -2018
## வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்


குகபாலன் சுபேசனா- 189


லோகேஸ்வரன் சாதுரியன் -185


யுகதீபன் பிரதிக்ஷா -182


பிறேம்குமார் கனியிசை- 180


ஸ்ரீரங்கநாதன் மதுரிகா -176


ஜெயரூபன் அட்சரா -174


இரத்தினசிங்கம் ஜென்சிகா -172


முகுந்தன் விந்தனா -172



சிவகுமார் சிந்துஷான் -170


சாந்தகுமார் நிஷான் - 165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் –05 புலமைப் பரிசில் பரீட்சை 2017 வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்ற எமது மாணவர்கள்


கி.சாரங்கி -179


லி.சங்கிசை -171


வி.நிர்மலன் -168


பு.துஷ்யந்தன்-163


நா.யிவிசன்-161


ஜெ.திருவருவி-156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 புலமைப் பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

மாவட்டத்தில் முதல்நிலை பெற்ற மாணவன்



யு.நுகாந் - 191



சி.செம்பியன் - 168



பி.நிகேதன் -165



து.மதுசிகா - 163



க.போஜனா- 160



த.டினோஜன் - 155



த.ஜான்சன் - 152

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எமது மாணவர்களின் மேன்மைக்கு வளம் சேர்த்த வளவாளர்கள்

1. திரு. சி.சிவகரன் - ஆசிரியர் - யா /றிபேக் கல்லூரி
2. திரு.வே.அன்பழகன் - ஆசிரியர் - யாழ்ப்பாணம்
3. திரு.ப.சசிறதன் - இணைப்பாளர் செயற்பட்டு மகிழ்வோம் - கிளி வலயம்
4. திரு.பொ. யோகநாதன் - அதிபர் - வவுனியா
5. திரு.ப.தவநேசன் - அதிபர் - கிளி/தருமபுரம் இல1 அ.த.க பாடசாலை
6. திரு.சி.கணேசலிங்கம் - உதவிக்கல்விப் பணிப்பாளர் - கிளி - யாழ் வலயம்
7. திரு.பா.ஸ்ரீஸ்குமார் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - கிளி வலயம்
8. திரு.அ.இரவீந்திரன் - உதவிக்கல்விப் பணிப்பாளர் - கிளி வலயம்
9. திருமதி. ரேகா கமல்ராஜ் - ஆசிரியர் - கிளி/கனகாம்பிகைக்குளம் வித்தியாலயம்
10. திரு.பொ.பிரகலாதன் - ஆசிரியர் - கிளி/விவேகானந்தா வித்தியாலயம்
11. திரு.சி.சத்தியசீலன் - ஆசிரியர் - கிளி/இராமநாதபுரம் ம.வி
12. திரு.க.மனோகரன் - ஆசிரியர் - கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி
13. திரு.து.கருணாகரன் -ஆசிரியர் - கிளி/திருவள்ளுவர் வித்தியாலயம்
14. திருமதி.பிரியாசக்தி.கிருபாலன் - ஆசிரியர் - கிளி/இராமநாதபுரம் ம.வி
15. திரு.ப.சுதர்சன்- அதிபர் - கிளி/கட்டைக்காடு அ.த.க பாடசாலை
16 திருமதி.ஜீவரஞ்சினி.விவேகானந்தராசா - ஆசிரியர் - இராமநாதபுரம் ம.வி
17. திரு.எஸ்.நிஷாந்தன் - ஆசிரியர் - மு/அம்பலப்பெருமாள் வித்தியாலயம்
18. திருமதி.ப.விமலேஸ்வரன் - ஆசிரியர் - கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி
19. திரு.சி. யசோதரன் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - வடமராட்சி வலயம்
20. திரு.S.மதியழகன் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - வடமராட்சி வலயம்
21. திரு.சதானந்தினி மதனராஜ் - ஆசிரியர் - மாயவனூர் வித்தியாலயம்
22. திரு.வி.விக்னேஸ்வரன் ஆசிரியர்-கிளி/இராமநாதபுரம் கிழக்கு அ.த.க பாடசாலை
23. திரு.சு.சிவகரன் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - முல்லை வலயம்
24. திரு.வே.நிர்மலன் - ஆசிரியர் - கிளி/கனகபுரம் ம.வி
25. திரு.வை.சுதாஸ்கரன் - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் - துணுக்காய் வலயம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 05 மாணவர்களுக்கான செயற்பாடுகள்


## ◆ கல்விக் கண்காட்சி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


◆ மேலதிக வகுப்புகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ◆ மேலதிக வகுப்புகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மாணவர் ஒன்றுகூடல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ◆ உதைபந்தாட்ட பயிற்சியும், போட்டியும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ◆ மாணவ முதல்வர்களுக்கு சின்னம் சூட்டுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


◆ கல்விச் சுற்றுலா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ◆ செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## ◆ மாதிரிச் சந்தை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ கிளித்தட்டு போட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ◆ கணினி பயிற்சி வகுப்பு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவா பதிப்பகம், 021 228 5534

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org